# அடிப்படையும் அறிமுகமும் (PART 2)

வாதத்தின் குணமானது- ரூக்ஷம் (வறட்சி), லகு (லேசு), சீதம் (குளிர்ச்சி), கரம் ((முறமுறப்பு), சூக்ஷ்மம் (நுண்ணியது), சலம் (அசையும் தன்மையுடயது).

பித்தத்தின் குணமானது- ஸ்னிக்தம் (பசையுள்ளது), தீக்ஷணம் (கூர்மை), உஷ்ணம் (சூடு), லகு (லேசு), விஸ்ரம் (துர்நாற்றம்), ஸரம் (இளகும் தன்மை), த்ரவம் (பெருகும் தன்மை).

கபத்தின் குணமானது - ஸ்னிக்தம் (பசையுள்ளது), சீதம் (குளிர்ச்சி), குரு (பாரமானது), மந்தம் (மெதுவானது), ச்லக்ஷ்ணம் (மழமழப்பானது) , ம்ருத்ஸ்நம் (கசகசவென்றிருப்பது), ஸ்திரம் (அசையாதது).

வாத-பித்த-கபங்களில் ஏதாவது இரண்டு தோஷங்கள் ஒன்றிலொன்று கலந்து விட்டால் அப்போது அது 'ஸம்ஸர்க்கம்' (கலத்தல்) என்று பெயர் பெறும்.

வாத-பித்த-கபம் மூன்றும் ஒன்றொடொன்று கலந்துவிடும் நிலைக்கு 'ஸந்நிபாதம்' என்று பெயர்.

'ஸம்ஸர்க்க' நிலையில் தோஷமானது குறைந்த நிலையிலோ, சீற்றமடைந்த நிலையிலோ இருக்கலாம். உத்கர்ஷம் (உயர்வு), அபகர்ஷம் (தாழ்வு) முதலான வகைகளால் ஸம்ஸர்க்கமானது ஆறு வகையாகவும், ஸந்நிபாதம் பத்து வகையாகவும் பிரிக்கப்படுகின்றது.

ஆறுவகை ஸம்ஸர்க்கம் : ஒன்று அதிகம் கூடுதல், ஒன்று குறைந்த அளவில் கூடுதல்
ஒன்று அதிகம் கூடுதல், ஒன்று மத்தியமான அளவில் கூடுதல்

ஒன்று மத்தியமாகக்கூடுதல், ஒன்று குறைவாக கூடுதல்
இரண்டு அதிக அளவில் கூடுதல்
இரண்டு மத்தியமான அளவில் கூடுதல்
இரண்டு குறைந்த அளவில் கூடுதல்

பத்து வகை ஸந்நிபாதம் : ஒன்று அதிகம், ஒன்று மத்தியமம், ஒன்று மத்தியமம்
ஒன்று அதிகம், ஒன்று குறைவு, ஒன்று குறைவு
ஒன்று மத்தியமம், ஒன்று குறைவு, ஒன்று குறைவு
ஒன்று அதிகம், ஒன்று அதிகம், ஒன்று மத்தியமம்
ஒன்று அதிகம், ஒன்று அதிகம், ஒன்று குறைவு
ஒன்று மத்தியமம், ஒன்று மத்தியமம், ஒன்று குறைவு
மூன்று அதிகம்
மூன்று மத்தியமம்
மூன்று குறைவு
ஒன்று அதிகம், ஒன்று மத்தியமம், ஒன்று குறைவு

தாதுக்களின் செயல்கள் :
ரஸம், ரத்தம், மாமிஸம், மேதஸ் (கொழுப்பு), அஸ்தி(எலும்பு), மஜ்ஜை(எலும்புக்கசிவு), சுக்லம்(விந்து) இவை ஏழுவகை தாதுக்களாகும். இவைகளை தூஷ்யங்கள்(வாத, பித்தங்களால் கெடுக்கப்படும் பொருள்கள் தூஷ்யங்கள்) என்றும் கூறுவர். சிறுநீர், மலம், வியர்வை, காது குலும்பி, முதலானவை உடல் மலங்களும், தூஷ்யங்களுமாகும்.